கண்டுபிடித்து அதை எல்லோருக்கும் தெரிவித்து எல்லோருடைய சந்தேகத்தையும் தீர்ப்பதற்கான கமிட்டி ஒன்றை அரசாங்கத்தார் அமைப்பார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஸ்ரீ கஜபதி நாயகர் அந்த வேலையை எடுத்துக்கொள்வாரானால், அதுபற்றி எனக்கு யாதொரு விதமான ஆட்சேபணையும் இல்லை. அவர் இந்த வேலையை எடுத்துக் கொண்டு இந்தக் காரியத்தில் உதவக் கூடியவர்களின் உதவியையும் பெற்று அது என்ன வார்த்தையாக இருக்கும் என்று அவர் நிபுணர்களைக் கொண்டு முடிவு செய்யலாம்.

Vidwan T. MUTHUKANNAPPAN : மிகத் தெளிவாக இருக்கும் விஷயத்தில் ஐயம் விளைவிப்பது சரியல்ல என்று நினைக்கிறேன். கம்பனை என்ற வார்த்தையைத் தான் பாரதியார் போட்டிருக்கிறார் என்று மிகத் தெளிவாகத் தெரிகிறது.

Most Backward Classes

* 30 *Q*.—**Sri M. ETHIRAJALU** : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether the educational concessions granted to "Most Backward Classes" in G.O. No. 353, Industries, Labour and Co-operation, dated 31st January 1957, have been given effetc to and, if so, from what year;

(*b*) whether copies of the Government Order have been communicated to all educational institutions, both private and Government; and

(*c*) the number of boys and girls in each district benefited by such educational concessions?

The Hon. Sri P. KAKKAN : (*a*) Yes, Sir, from the academic year 1957–58.

(*b*) Yes, Sir.

(*c*) The time and labour involved in collecting these particulars will not be commensurate with the purpose that would be served.

Sri M. ETHIRAJALU : இந்தக் கல்விச் சலுகையை அளிக்கும் உத்தரவு போடப்பட்டு ஓர் ஆண்டு காலம் ஆகியிருந்தும் கூட, மிகப் பின்தங்கிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர்களுக்கு இந்தச் சலுகை இன்னும் கிடைக்கவில்லை என்ற புகார்கள் இன்னும் வந்துகொண்டிருக்கின்றன. தனிப்பட்டோர் நடத்தும் பள்ளிக்கூடங்களில் தான் இச்சலுகை மறுக்கப்படுவதாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட புகார்களை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்தால், சம்பந்தப்பட்டவர்கள் மீது அரசாங்கம் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்குமா ?

The Hon. Sri P. KAKKAN : புகார் செய்யப்பட்டால், விசாரிப்போம்.

Sri V. K. PALANISWAMY GOUNDER : பின் தங்கிய வகுப்பினருக்கும், மிகப்பின்தங்கிய வகுப்பினருக்கும் இத்தகைய சலுகைகள் கொடுக்கப்படுவது குறித்து எனக்கு ஆட்சேபணை இல்லை. இருந்தாலும், இவ்வாறு ஜாதி அடிப்படையில் கல்விச் சலுகைகள் கொடுப்பது சரியா என்றும், இந்தமுறையை மாற்றுவதற்கு அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறதா என்றும் கேட்க விரும்புகிறேன்?

The Hon. Sri P. KAKKAN : இதற்கு கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

Mr. CHAIRMAN : **Questions are over.**